TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து. வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் IX.] FEBRUARY, 1909-௵ பெப்ருவரி௴. [இலக்கம் 1.

1908-ம் வருடத்திய ஜீ. ஹி. நி. சங்கத்தின் ஜந்து விநோதக் காட்சி.

இக்காட்சியானது சென்ற பல வருடங்களைப்போலவே கடந்த 1908-௵ டிசெம்பர்௴ 12-ம் தேதி சனிக்கிழமை யன்று சென்னைக் கோட்டையின் சமீபத்திலிருக்கும் ஜிம்கானா மைதானத்தில் நடந்தேறிற்று. இக்காட்சிக்கு மாட்சிமைதங்கிய கவர்னரவர்கள் தம் மனைவியாருடன் விஜயம்செய்தனர். காட்சியில் உன்னதமான மிருகஜாதிகளும், பறவைச்சாதிகளும் கொண்டுவரப்பட்டன. அப்போது ராஜாக்கள் சிலரும், ஜமீன்தார்களும், ஆயிரக்கணக்கான ஜனங்களும் காட்சியைப் பார்க்க வந்தார்கள். அக்கூட்டம் சென்ற பல வருடங்களைப்பார்க்கிலும் விசேஷமாக விருந்தது. காட்சியும் அதிவிமரிசையாகவே யிருந்தது. ஜீவகாருணியத்துடன் சரியாகப் போஷிக்கப்படும் குதிரைகள் பசுக்கள் முதலிய மிருகங்களைக் கொண்டுவந்து காட்டினவர்களுக்கும், பந்தயங்களில் கெலித்தவர்களுக்கும் அநேகம் வெகுமதிகள் கொடுக்கப்பட்டன. அப்படிக் காட்டப்பட்ட ஜந்துக்களில் முக்கியமானவை:—

சரியாகப் போஷிக்கப்பட்ட கழுதை, வாடகை வண்டி யிழுக்கும் எருதுகள், சுத்தமாகவும் பந்தோபஸ்தாகவும் வைத்திருக்கும் பக்ஷிகளின் கூடுகள், தன் எஜமானனைப் பின்பற்றித் திரியும் நாய்கள் தவிர இதர ஜந்துக்கள், சரியாகப் போஷிக்கப்பட்ட ஜட்கா வண்டிக் குதிரைகள், 14 பிடிகளுக்கு மேற்பட்ட வாடகை வண்டிக் குதிரைகள், இடையரால் சரியாகப் போஷிக்கப்பட்ட பசுக்கள், கன்றுகள், இரட்டை மாட்டுவண்டி யோட்டுபவர்களின் வண்டி எருதுகள் முதலியவைகள்; அவைகளுக்குத் தக்க பரிசுகள் கொடுக்கப்பட்டன. இவ்வளவு ஜந்துக்களில் நல்லது, கெட்டது அதாவது நன்றாய்ப் போஷிக்கப்பட்டது, படாதது என்று நன்றாய்ப் பரிசோதித்து நல்ல ஜந்துக்களுக்குத் தகுதியான வெகுமதிக ளளிக்கும் பொருட்டுச் சில ஐரோப்பிய கனவான்களையும், சுதேசக் கனவான்களையும், ஜட்ஜிகளாகச் சங்கத்தார் நியமித்தார்கள். இவர்கள் மிகச் சிரத்தையுடன் பரிசோதித்து உசிதமானவைகளுக்கு வெகுமதிக ளளிக்கும்பொருட்டு ஏற்பாடு செய்தார்கள்.

எழுதவும் படிக்கவும் தெரியாதவர்கள் ஜந்துக்களின் உபயோகத்தையும், அவைகளும் கடவுளின் சிருஷ்டிக ளென்பதையும் கண்டுகொள்ளாதவர்களாய் ஜீவ ஹிம்சை செய்வது சாதாரணமான பழக்கமாகையால் அவர்கள் வெகுமதிகளுக் காசைப்பட்டாகிலும் ஜந்துக்களினிடத்தில் தயையுண்டாகி அவைகளைச் சரியாகப் போஷித்து, அவைகளினிடத்தில் கருணைபொருந்தி யிருப்பார்களென்ற அபிப்பிராயத்துடன் சங்கத்தார் இவ்வளவு பாடுபட்டு வெகுமதிக ளளிக்கிறார்கள். இந்த வெகுமதிக்கென அநேகம் பிரபுக்களால் கொடுக்கப்பட்ட திரவிய சகாயத்துடனும், மற்றும் சில கனவான்களால் கொடுக்கப்பட்ட வெள்ளிக் கிண்ணங்கள்,

கடியாரங்கள் முதலான வெகுமதிகளுடனும் சங்கத்தார் இவ்விநோதக் காட்சி நடத்தினர்கள். இதற்குப் பொருள் உதவினவர்களின் பெயர்களை விளம்பரம் செய்வதற்குப் பத்திரிகையில் போதுமான இடமின்மையால் அவற்றை விட்டுவிட்டிருக்கிறோம். இக்காட்சி நடைபெறும் சமயத்தில் சென்னை மவுண்டு ரோட்டிலுள்ள மோஸஸ் கம்பெனியார், வெகுமதிகளாக அளித்த பணத்தைப் போட்டுக் கொடுப்பதற்காகப் பட்டுப் பைகளையும், இன்னார் இச்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிந்துகொள்வதற்காகச் சங்க அங்கத்தினர்கட்கும் ஜந்துக்களை ஆராய்ச்சி செய்த ஜட்ஜிகளுக்கும், (Badges) பட்டுப் புஷ்பங்களையும் செய்தளித்தார்கள்.

காட்சி நடந்தேறினபிறகு அநேகம் பிரபுக்களின் முன்னிலையில் மாட்சிமை தங்கிய கவர்னரவர்களின் பெருமாட்டியாராகிய லேடி லாலி அவர்கள், ஜட்ஜிகளின் நியமனப் பிரகாரம் வெகுமதிகளை அவரவர்களுக்கு அளித்தார்கள். இத்தகைய பல விமரிசையுடன் 1908-ம் வருடத்திய ஜந்து விநோதக் காட்சி நடந்தேறினபோதிலும், இதற்குமுன் பிரதி வருடமும் இச்சங்கத்தின் அக்கிராஸனுதிபதியாக விருந்து இப்பேர்ப்பட்ட காட்சிகளில் அதிசிரத்தையுடன் பாடுபட்டுக் கொண்டும், காட்சியின் எப்பக்கத்தில் பார்த்தாலும் கண்ணுக்குப் புலப்பட்டுக்கொண்டுமிருந்த காலஞ்சென்ற ஜட்ஜி பாடெம் துரையவர்கள் இவ்வருடமில்லாமற்போனது, அக்காட்சியிற் சிறிது குறைவாகவும், அச்சங்கத்தின் அங்கத்தினர்களுக்கும், பொது ஜனங்களுக்கும் விசனப்படக் காரணமாகவு மிருந்தது. இக்காட்சி யிதைவிடப் பன்மடங்கதிகமாகப் பிரதி வருடமும் மிகச் சிறப்புடன் நடைபெற வேண்டுமெனக் கோருகிறோம்.

அதி மனோசக்தியுள்ள ஒரு நாய்.

அமெரிக்கா தேசத்தில் சிக்காகோ நகரில் "பாஜி" என்ற பெயருடைய ஒருநாய் உண்டு. அந்த நாய்க்கு எஜமான் மிஸ்டர் ஜார்ஜ் பீ. க்ளாஸன் என்பவர். இந்த நாய் அதி யற்புதமான மிருகம். உலகத்தில் எல்லோரும் ஆச்சரியப்படத்தக்க மனோசக்தியை யுடையது. அது இலக்கங்களை எண்ணும், கணக்குகள் பார்க்கும், கூட்டும், கழிக்கும், வகுக்கும், மணி நிமிஷங்களை யறிவிக்கும், எழுத்துக் கூட்டும், ஒருவர் நினைத்ததைச் சொல்லும், சொன்ன வேலைகளைச் செய்யும். அநேகர் பற்பல தேசங்களிலிருந்து வந்து இதைப் பரிசோதனை செய்தார்கள். 1904-ம் வருடம் ஜூலை மாதத்தில் சிக்காகோ நகரில் பல தேசத்து வித்வான்கள் ஒரு கூட்டங் கூடினர். அக்கூட்டத்தில் இந்த நாயும் பரீக்ஷிக்கப்பட்டது. அநேகர் இந்த நாயின் மனோசக்தியைச் சோதித்து அறிந்தார்கள். எஜமானுகிய மிஸ்டர் க்ளாஸன் அதன் பக்கத்திலிருந்துகொண்டு ஒவ்வொருவர் கேட்கும் கேள்விகளையும் தாம் கேட்டு அதனைச் செய்யும்படிச் சொன்னர். அது எல்லோரும் ஆச்சரியப்படும்படிச்செய்துமுடித்தது. எஜமான் நாயைப் பார்த்து "இங்கு வந்திருக்கிறவர்கள் எத்தனைபேர்" என்று கேட்டார். வந்திருக்கிறவர்க ளெல்லோரையும் ஒருமுறை சுற்றிப் பார்த்துவந்து எத்தனைபேர் இருந்தார்களோ அத்தனைதரம் குரைத்துக் காட்டிற்று. இப்படிச் சில அற்புதங்களைப் பார்த்தபிறகு, அங்குள்ளவர்களிற் சிலர் எஜமானைப் பார்த்து, "நீர் அதன்கூட இருந்து ஒன்றுஞ் சொல்லக்கூடாது. ஒருக்கால் பழக்கத்தினுல் அப்படி அது காட்டலாம். நாங்கள் தனித்தனிப் பரிசோதிக்கவேண்டு"மென்று சொன்னர்கள். அப்படியே செய்யுங்களென்று எஜமான் மற்றொரு அறையில் போயிருந்துகொண்டார். ஒருவர் கணக்குப் பரீக்ஷை செய்தார். "மூன்றில் ஒன்றைக் கழித்து இரண்டைக் கூட்டி மொத்தம் எவ்வளவு" என்று கேட்டார். நமது பாஜி நான்குதரம் குரைத்தது. மற்றொருவர் இங்கிலீஷின் 26 எழுத்துக்களையும் தனித்தனி ஒவ்வொரு துண்டில் எழுதி எல்லாவற்றையும் சேர்த்து ஒரு குப்பலாய்ப் போட்டு "இதில் உன்னுடைய பெயரை எழுத்துக் கூட்டி எடுத்துவை" என்று கேட்டார். அது B. O. Z. Y. என்ற நான்கெழுத்துக்களை எடுத்துவைத்து இன்னொரு Z இல்லாமையால் உள்ள ஒரு Z துண்டை எடுத்து வைத்து ஒருதரம் குரைத்தது. எனவே இன்னொரு Z வேண்டுமென்பதாயிற்று. அதனுல் அதன் பெயர் பாஜி என்பதறிவித்தது. சிலர் எஜமானுடைய சொற்களல்லாமல் மற்றொருவருடைய வார்த்தையை அறிந்துகொள்ளும்

சக்தியை உடையதல்ல வென்று நினைத்தார்கள். "உன் எஜமான் எங்கே" என்று கேட்டனர். உள்ளே இருக்கும் தன் எஜமானிடத்துச் சென்றது. எஜமான் திரும்பிவந்து அங்கேயிருந்த சிலரைச் சுட்டிக்காட்டி "கொஞ்சம் நாழிகைக்குமுன் இவர்கள் நினைத்தது என்ன" என்று கேட்டார். அது அங்கே எழுதிப் போடப்பட்டிருந்த தனித்தனி எழுத்துத் துண்டுகளில் ஐந்து துண்டுகளை எடுத்துவந்து வரிசையாக வைத்தது. அவ்வரிசையின் எழுத்துக்கள் F. R. A. U. D. அதாவது Fraud "புரளி" என்ற வார்த்தை. அதாவது "இவர்கள் என் செய்கை புரளியென்று நினைத்தார்கள்" என்பதாம். பிறகு எஜமான் "இந்தக் கனவான்கள் சொல்லுகிறபடிச் சரியாய் அவற்றைச் செய்" என்று கட்டளையிட்டார். அவர்களையும் "ஏதேனுமொரு இலக்கத்தை அதற்குத் தெரியாமல் நீங்கள் எழுதி வையுங்கள்" என்று சொன்னார். ஒருவன் 8 எழுதி வைத்தான். அது அவனிடத்திற் போய் எட்டுதரம் குரைத்தது. மற்றொருவன் மனதிலொரு இலக்கத்தை எண்ணிக்கொண்டு கடுதாசியில் ஒரு இலக்கத்தை எழுதி வைத்தான். நமது ஞான திருஷ்டியுடைய பாஜி அவனிடத்திற் போய் நின்றுகொண்டு சற்றுநேரம் கீழ் நோக்கியும், சற்றுநேரம் மேல் நோக்கியும், சற்றுநேரம் அவன் முகத்தைப் பார்த்துத் தலையசைத்தும் நாலுதரம் குரைத்தது. பக்கத்திலிருந்த ஒருவன் "ஓ! இது பொய்" 5 எழுதப்பட்டிருக்கிறது என்றான். ஆனால் நினைத்து எழுதினவன் "ஓ! அல்ல. அது சொன்னதே சரி. நான் செய்த வேலைதான் இது. நான் எண்ணியது 4 தான். எழுதியது 5. அதனைப் பரிசோதிப்பதற்காகச் செய்தேன்" என்றான். இப்படி அநேகம் சோதனைகளெல்லாம் நடந்தன. நமது மிருகயோகி பேசாமலே செய்கையினாலே இவ்வாறெல்லாம் சோதனையில் தேறிற்று. பிறகு எஜமானன் ஒரு கடுதாசியில் "இன்றைக் காலையில் வந்த பத்திரிகையைக் கொண்டுவரும்படி நீர் மனதிலே நினைத்துக்கொண்டு அந்த நாயைப் பாரும்" என்று அடுத்திருந்த மனிதன் ஒருவருக்கு எழுதிக் காட்டினார். அந்த மனிதன் அந்தப்படி நினைத்துக்கொண்டு அந்த நாயைச் சற்றுநேரம் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். அடடா! என்ன ஆச்சரியம்! இந்த மனோசக்தி மிருகஜீவனுக்கு அமைந்தவிதம் அவரது செயலன்றி யார் செயலெனலாம்! ஈஸ்வரா, சர்வகாரணரே, ஜகன்னாதா, சர்வ ஜீவ தயாபரரே, சர்வேஸ்வரா, மஹாப்பிரபு, உம்முடைய செயலே செயல்! யாவரே அறிவார் உமது திருவிளையாடல்களை! அந்த நாய் தன் வாலை ஆட்டிக்கொண்டு அங்கோர் மூலையிற் சென்று அங்கு இருந்த பத்திரிகை ஒன்றை வாயினால் கௌவிக்கொண்டு வந்து கொடுத்தது. அதுதான் எஜமானன் கேட்ட காலைப் பத்திரிகை. இது என்ன! பழக்கமா? ஜாலமா? மந்திர வித்தையா? அல்ல அல்ல. உண்மையில் உண்மையான மானச வித்தையே. இவர்களுள் ஒரு அயோக்கியன் துன்மார்க்கமாக இதைப் பரிசோதிக்கத் தொடங்கினான். தன்னுடைய வயதை மனதில் எண்ணிக்கொண்டு அதன் தலையிற் தன் கையை வைத்தான். அவனோ உண்மையில் 40 வயதுடையவன். பார்வைக்கு 20 வயதுப் பாலியனைப்போல் தோற்றுகிற தோற்றமுடையவன். அவன் வயது அவனுக்கேயன்றி மற்றியாருக்கும் தெரியாது. அவன் வயதைப்பற்றி ஒருவரும் சொன்னதுமில்லை. நமது மனோபல சிகாமணியாகிய பாஜி அவனிடம் போய் நின்றுகொண்டு 40 தரம் குரைத்தது. அவனும் அது சரியென ஒப்புக்கொண்டான். மிருகங்களிலும் இப்படிப்பட்ட மானச சக்தியையுடைய பிராணிகள் இருக்கின்றன. அறியவும், பேசவும், அறிந்து பேசியபடி ஒன்றைச் செய்யவும், இயற்கையிற் சக்தியமைந்த மனிதருள் சிலர் தனக்கு வரும் வாழ்வு தாழ்வுகளைக் கருதாது, நாம் என்றும் ஒரேவிதமாய் வாழ்வோமெனக்கருதி அடுத்த நிமிஷம் தாம் கெடுவ தறியாமல் பிறரை ஏளனஞ்செய்யும் அறியாக்குணம் படைத்து வாழ்கின்றனர்.

குரங்கின் அறிவு.

குரங்கு மிகவும் வேடிக்கையான ஜந்து; மோவாய்க்கட்டையில்லாத அதன் விகார முகம் நகைப்புக் கேதுவாகிறது; வாயிற் கொள்ளும் இரையைச் சாவகாசமாய்த் தின்னலாமென்று பரபரப்புடன் தன் கன்னத்திலுள்ள பைகளில் துறுத்துவைக்கிற வழக்கமும், பக்கத்துக்குப் பக்கம் தலையையும் கண்

களையும் அடிக்கடி திருப்பித் திருப்பிக் கிரீச் கிரீச் எனக் கத்திக் குதித்து இளித்துக் கற்பித்த வித்தைகளைக் கோரணியுடன் செய்கிற அதன் குணமும் பார்ப்பவர்களுக்குச் சிரிப்புண்டாக்காமற்போகா. குரங்கு தன் கால்களையும் கைகளாக உபயோகிப்பதனிமித்தம் கற்றோர் அதனை நாற்கைப் பிராணியென்றும் மனிதனை இருகைப் பிராணியென்றும் சொல்லுவார்கள். குரங்குகள் பெரும்பாலும் காய் கனி தின்று பிழைக்கும்; பருமனாலும் நிறத்தினாலும் பலவகைப்படும். சில வாலுள்ளன, சில வாலில்லாதன; மனிதனுயரம் வளர்ந்து அவனிலும் பலமுள்ளதான ஒரு ஜாதி ஆபிரிக்காகண்டத்துக் குரங்கு ஒரு குத்தினால் மனிதன் தலையையும், ஒரு உதையினால்வயிற்றையும் நொறுக்கிக் கிழித்துவிடக் கூடியது. ஜனங்கள் செய்கிறதைப் பார்த்துத் தானும் அதுவாகப் பாவிக்க விரும்புகிற பிராணி குரங்குக்கு மிஞ்சினது இல்லை. இதற்குத் திருஷ்டாந்தமாக ஒரு வேடிக்கைக் கதை உண்டு.

ஒரு அடைப்புக்குள் விட்டிருந்த சில குரங்குகளுக்கு ஒருநாள் ஒரு துரை மாம்பழங் கொண்டுவந்து ஒவ்வொன்று கொடுக்க, அங்கிருந்த பெரிய குரங்கொன்று தனதை விரைவாய்த் தின்று தீர்த்து ஒரு சிறு குரங்கின் பழத்தைப் பிடுங்கிக்கொண்டது. சற்றுப் பொறுத்து அருகில் நின்ற ஒரு பையனும் ஒரு குரங்கின் பழத்தைப் பிடுங்கினான். அந்தத் துரை தாம் கையில் வைத்திருந்த கோலால் அவனைப் பலமாய் அடித்ததையும், அடிபட்ட மாத்திரத்தில் பையன் பழத்தை எறிந்துவிட்டு ஓடினதையும் பார்த்த அந்தச் சிறு குரங்கு துரையினிடத்தினின்று கோலை மெள்ள வாங்கித் தன் பழத்தைப் பிடுங்கின குரங்கைச் சுரீரென்று தாக்கிற்று. அது வீரிட்டு விழுந்த அடியைத் தடவிக்கொண்டு எட்ட விலகி உட்கார்ந்தது. இதன்பின் அந்தத் துரை அவ்வளைவினிடத்தில் மாம்பழங் கொண்டுவந்திருப்பதைக் கண்டால் யூகமுள்ள அம்மந்திக்குட்டி செய்கிறதின்னதென்று உபாயம் அறிந்துகொண்டதால் ஒரு கையிற் பழத்தையும் ஒரு கையிற் கோலையும் வாங்கிப் பழத்தைத் தின்னும். அப்பால், பெரிய குரங்குகள் அதன் ஜோலிக்கு வரத் துணியவில்லை.

குதிரைகள் மிரண்டு வண்டிகளைக் கவிழ்த்தல்.

நம் தேசத்தில் குதிரை வண்டிகளினால் உண்டாகும் நானாவித ஆபத்துகளையெல்லாம் ஒரு புத்தகத்தில் பதிவுசெய்து வந்தால், அப்போ தவற்றை விலக்கத் தகுதியான யோசனை பிறக்கும். சென்ற சில வருடங்களுக்குள்ளாக அநேக விதமான ஆபத்துகள் நேரிட்டு, அநேகர் மரணமாய்விட்டிருக்கிறார்கள். சிலருக்குக் கடுங்காயங்களும், சிலருக்குக் கை, கால்கள் முதலான அவயவங்கள் முடமாகியும் போயிருக்கின்றன. இவ்வாபத்துகளுக்கெல்லாம் காரணமென்னவென்றால் "குதிரை மிரண்டு பிடுங்கிக்கொண்டு ஓடிவிட்டது" என்கிறார்கள். இவ்வாறு குதிரைகள் மிரண்டு பிடுங்கிக்கொண்டு ஓடிவிடுவதற்குக் காரணம் நாம் அவைகளுக்கு அதிகமாகத் தீனி போடுவதேயாம். அநேகங் குதிரைகள் மிதமற்ற தீனி தின்று வேலை ஒன்றுமில்லாமல் கெட்டுப்போ யிருக்கின்றன. இம்மாதிரியான குதிரைகள் எப்பொழுதாகிலும் ஒருநாள் சவாரி செய்யப்படுமானால் மிரளும். குளிர் காற்றுப் பட்டவுடனே துள்ளிக் குதிக்க ஆரம்பிக்கும். அச்சமயத்தில் இரத்தம் அவைகளின் தலைக்கு ஏறிவிடுகிறதினால் பித்தம் பிடித்ததுபோலாகி ஏதொன்றும் செய்ய முடியாமல் மிரண்டு ஓட ஆரம்பிக்கும். ஆயினும், இக்காரணங்களைக் குறித்து நாம் குதிரைகளுக்குப் போதுமான தீனி போடாமலு மிருக்கக்கூடாது. தினமும் சரியாக வேலைசெய்யும் குதிரைக்குச் சரியாகத் தீனி போட்டால் அது ஒன்றும் தீங்கு விளைவியாது. சரியான வேலையில்லாத குதிரைகள் தான் மிரண்டு ஓடும். சிறுபிள்ளைகள் சவாரி செய்யும் குதிரைகளுக்கும் ஜாக்கிரதையாகவும் மிதத்தோடும்தீனிபோடவேண்டும். சிலர் குதிரைகள் வாங்கினவுடனே சரியாய் ஓடுவதாகவும், கொஞ்சக்காலம் பொறுத்துச் சரியாய் ஓடாமல் மிரளுவதாகவும் சொல்கிறார்கள். இதற்குக் காரண மென்னவென்றால் குதிரையை வாங்கினவுடனே அதன்மீதிருக்கும் பிரியத்தினால் மிதமில்லாத தீனி போட்டுக் கொஞ்சம் வேலைவைப்பதுதான். ஒரு குதிரை மிரண்டதானால் உடனே அதைச் சவுக்கினால் அடிப்பது தப்பு. அப்

படி அடிப்பதனுல்தான் பயந்து மிரண்டு பிடுங்கிக்கொண்டு ஓட ஆரம்பிக்கிறது. ஆகையால் மிரண்ட உடனே அடியாமல் சமாதானமான சில வார்த்தைகள் சொல்லிக் குதிரையைத் தட்டிக் கொடுத்தால் மிரட்சி நீங்கிச் சாதுவாக ஓடப் பிரயத்தனம் செய்யும். குதிரை பார்த்து மிரண்ட வஸ்துவையும் அதன் கண் முன்பாகக் காட்டினுல் மிகவும் நல்லது. குதிரை ஓடிக்கொண்டிருக்கும்போது வழியில் தடுக்கிட்டால் உடனே அதைச் சவுக்கினுல் அடிப்பது மிகவும் பாபம். அது தடுக்கிட்டுக் கஷ்டப்படுங் காலத்தில், கூடச்சவுக்கடியும் விழுந்தால், அதற்குப் பாதை அதிகரிப்பதனுல் அது பூமியில் விழுந்துவிட நேரிடுகிறது. தடுக்கிடும்போது அடியாமல் நிதானித்தால் சிறிது நேரம் பொறுத்துச் சரியாய் ஓடும்.

பலவகையான ஹிம்சைகள்.

1881-ம் வருடத்தில் லண்டனிலிருக்கும் "ஆர்ட்ஸ்" சங்கத்தில் வெட்டர்னரி சர்ஜன்கள், நாஷனல் காங்கிரஸ் ஒன்று கூடிப் பின் வருமாறு தீர்மானித்தார்கள்:—

மிருகங்கள் முடமாக விருப்பது இரண்டு விதம். அதாவது கால்களில் நோயுண்டாகி ஓடச் சக்தியற்றிருப்பது ஒருவித முடம். இயற்கையாகவே காலொடிந் திருப்பதால் நடக்கச்சக்தியற்றிருப்பதும் முடமே. அதை அறிந்துகொண்டு தக்கபடிப் போஷித்து வரவேண்டும். நோயுடன் முடமாகவிருந்தால் அம்மிருகத்தை வேலையிடக்கூடாது. புண்களிருந்தால் வேலையிடாம விருக்கக்கூடாது. அப்புண்கள் வண்டியில் மாட்டும்போது, ஜீனி முதலான தோல் சாமான்களால் தேய்க்கப்படாமல் பார்த்துக்கொண்டு தக்க மருந்து போட்டுக் குணப்படுத்திக் சொள்ளவேண்டும். சில குதிரைகளுக் கிருக்கும் "ஓனுய்ப் பல்லை"ப் பிடுங்குவது கொடிய காரியம். இளம் பற்களைப் பிடுங்கக்கூடாது. ஆடுகளை நெருக்கமான தொழுவத்தில் அடைக்கக் கூடாது. மிருகங்களுக்குச் சூடுபோடுவது அவசியமானுல் அதிக பாதை யில்லாமலும், அதிசீக்கிரமாகவும் அக்காரியத்தை முடிக்க வேண்டும். மிருகங்களின் வால்களைப் புழுக்கள் அடிக்கும்படியாக விடக்கூடாது. அடிக்கடி பரிசோதிக்கவேண்டும். நாய்களின் காதுகளையும் வால்களையும் வெட்டுவது மிகவும் பாபம். ஆண் மிருகங்களுக்கு நபும்சகம் அதாவது ஆண்தன்மையைப் போக்கடிப்பது அவசியம். ஆனுல் அவ்வாறு செய்வித்தால் வலியில்லாமலும், மிகவும் தேர்ந்த ஆள்களைக் கொண்டும் அதிசீக்கிரத்தில் செய்விக்கவேண்டும். பெண் மிருகங்கள் குட்டிபோடப் பிரஸவ வேதனைப்படுங்காலத்தில் சிலர் கொடிய விதமாகப் பாதை யுண்டாக்கிக் குட்டியை வெளிப்படுத்துகிருர்கள், அது கூடாது. அச்சமயங்களில் தேர்ந்தவர்களைக்கொண்டு அந்தக் காரியங்களை நடத்தவேண்டும். ஒன்றும் தெரியாத அநேகர் மிகவும் தெரிந்தவர்களைப் போல் மிருகங்களுக்குச் சிகிச்சை செய்து மிகவும் தொந்தரை செய்விப்பது சரியல்ல. அப்படிச் செய்பவர்களைக் கோர்ட்டார் மூலமாகத் தண்டிக்கவேண்டும்.

ஆகாயப்பக்ஷிகள்.

பக்ஷிகளைக் கூட்டிலடைத்து வைப்பதைப் பார்க்க அநேகர் சகிக்கமாட்டார்கள். கூடு செய்து விற்பவன்தான் பக்ஷிகளைக் கூட்டிலடைக்க விரும்புவான். மேலும், "வானம்பாடி" என்னும் பக்ஷியை ஒரு மரக்கூட்டிலடைத்து வைப்பது மிகவும் கொடுமையான காரியமென்று சிலர் கூறுவார்கள். பக்ஷிகளைப் பிடித்து விற்கிறவர்கள் பக்ஷிகளைக் கூட்டிலடைக்க விரும்புகிருர்கள். சிலர் பக்ஷிகளைக் கூட்டில் வளர்த்து வந்து அவைகள் எவ்விதத்திலாவது மாண்டுபோய்விட்டால் பிறகு அவற்றைக் கூட்டில் வளர்க்கும் வழக்கத்தை அடியோடு விட்டுவிடுகிருர்கள். இது மிகவும் நலமான காரியம். சில ஸ்திரீகள் தங்கள் குழந்தைகள் விளையாடுவதற்காகச் சிறு பக்ஷிகளை விலைக்கு வாங்கி வீட்டில் வளர்க்கிருர்கள். அக்குழந்தைகள் அப்பக்ஷிகளை மிகவும் ஹிம்சிக்கிருர்கள். பக்ஷிகளின் விஷயத்தில் நாம் இரண்டு விஷயங்களை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். முதலாவது யாவரும் பக்ஷிகளைக் கூட்டிவிட்டு வளர்க்கும் பழக்கத்தை விட்டுவிடவேண்டும். இரண்டாவது அவைகளினிடத்தில் நாம் ஜீவகாருண்யம் காட்டவேண்டும். பக்ஷிகள் பறக்கும்படியாகக் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டனவேயன்றிச் சிறுபிள்ளைகளின் விளையாட்டுக் கருவிகளாகச் சிருஷ்

டிக்கப்படவில்லையென்பதை நாம் நம் சிறுவர்களுக்குப் போதிக்கவேண்டும். வானம்பாடி தன் கூட்டை விட்டு அதிக உயரத்தில் பறந்து கண்ணுக்குத் தெரியாத தொலைதூரத்தில் போய்ப் பறக்கும். நாம் சில சமயங்களில் சரியாகக் கவனித்துக் கேட்போமானால் அவைகள் பாடுவதையும் கேட்கலாம். பக்ஷிகளை விற்பனை செய்து ஜீவிக்கிறவர்கள் அநேகம் பக்ஷிகளை ஒரு சிறிய கூட்டில் கும்பலாக அடைத்து அவைகளுக்குச் சரியான காற்றில்லாமல் துன்பப்படுத்துகிறார்கள். சரியான தீனியும் போடமாட்டார்கள். சிலர், பக்ஷிகள் நன்றாய்ப் பாடுவதற்காகக் கண்களைப் பிடுங்கி விடுகிறார்கள். இது மிகவும் கொடூரமான காரியம். ஆகையால் நாம் நம் சிறுவர்கள் பக்ஷிகளினிடத்தில் மிகவும் பிரியமாக விருக்கும்படி அவர்களுக்குப்போதித்துக்கொண்டேவரவேண்டும்.

குதிரையோட்டுபவர்களுக்கு ஒரு நல்ல புத்திமதி.

குதிரையானது இயற்கையாகவே எல்லா மிருகங்களிலும் மேன்மையானது. அப்பேர்ப்பட்ட மிருகத்தை நாம் எவ்வளவு பக்ஷத்துடன் போஷிக்க வேண்டுமென்பதை நாம் நன்றா யறிந்துகொள்ளவேண்டும். அரபியர்கள் குதிரைகளைத் தங்கள் நாய்களைப் போல் அவ்வளவு பிரியத்துடன் வளர்க்கிறார்கள். அக்குதிரைகளும் நாய்களைப்போலவே தங்கள் எஜமானன்களைப் பின்பற்றித் திரியும். அநேகர் தங்கள் குதிரைகளை மிகவும் வருத்தி அதிக வேலை வாங்கிக்கொள்ளுகிறார்கள். நாம் அவைகளை மிகவும் பக்ஷத்துடன் வளர்த்துவந்தால் அவைகளினிடத்திலிருந்து சாதாரணமாகச் செய்வதைப் பார்க்கிலும் இருமடங்கு வேலை செய்வித்துக் கொள்ளலாம். ஒரு குதிரையானது மிகவும் பாரமான சுமையைத் தூக்கிக்கொண்டு ஒரு மலையின்பேரில் ஏறிச் செல்லும்போது அதை இன்னும் அதிக துரிதமாகச் செல்லும்படி அதன் பின்புறத்தில் குத்துவது மிகவும் அடாதகாரியம். அவ்வாறு குத்துவதனால் அது சாதாரணமாக இழுத்துச் செல்லக்கூடிய பாரத்தையும் இழுக்க முடியாமற் போய்விடுகிறது. அச்சமயத்தில் அதன் ஜீனியையும் இறுக்கிப் பிடிக்கக்கூடாது. குதிரைகளை ஓட்டும்போது அது சுகமாகவும், சாதாரணமாகவும் செல்லும்படியாக அதன் கடிவாளத்தைத் தளரப் பிடித்து ஓட்டவேண்டும். ஒரு சிறுவனை இரண்டு கைகளையும் பின்புறம் கட்டிவிட்டு ஓடச்சொன்னால் அவன் எவ்வாறு அதிக விரைவாக ஓட முடியாதோ அவ்வாறே குதிரையையும் கடிவாளத்தை இறுக்கி ஓட்டினால் அது அதி விரைவாக ஓட முடியாது. ஒரு குதிரையானது ஏதாவது ஒரு வஸ்துவைக் கண்டு மிரளும்போதும், பூச்சுக்கடியினால் அவஸ்தைப்படும்போதும், இறுக்கிய கடிவாளத்தினால் மிகவும் அவஸ்தைப்படும்போதும், அதைப் பின்னும் அவஸ்தைப்படும்படியாகச் சிலர் சவுக்கினால் அடிக்கிறார்கள். இது மிகவும் ஜீவகாருண்யமற்ற காரியம். அது அவ்வாறு அவஸ்தைப்படும்போது அடித்தால் சரியாகச் செல்லுமென்று சிலர் மூட எண்ணம்கொண்டு அடிக்கிறார்கள். ஒரு குதிரை ஒரு வஸ்துவைக் கண்டு வழியில் மிரளும்போது அதை உடனே அடியாமல் அதனருகிற் சென்று அது பார்த்து மிரண்ட வஸ்துவை அதற்குக் காட்டிச் சமாதானப்படுத்தவேண்டும். பிறகு ஓட்டினால் குதிரை சரியாகச் செல்லும்.

விலைகொடுத்துப் பக்ஷிகளி னுயிர்காத்தல்.

ஐந்து வர்த்தமானசார பத்திராதிபருக்கு,

ஐயா,

இந்துக்களின் தருமசாஸ்திரப்படி பார்ப்போமானால், விலைகொடுத்து உயிர்காத்தல் என்னும் தருமம் முப்பத்திரண்டு தருமத்தில் ஒன்றெனச் சொல்லப்பட் டிருக்கின்றது. சுகஜீவியாகத் தனக்கு இஷ்டமான தீனியை யோடித் திரிந்து தேடித் தின்னவும், அதன் மனம்போல் தன் ஜாதிப் பறவையுடன் பேசவும் கலக்கவு மிருக்கும் பறவையை நாம் கூண்டி லடைத்தால், நம்மைச் சிறையில் அதாவது ஜெயிலில் அடைத்தால் நமக்கு எவ்வளவு கஷ்டமிருக்குமோ அவ்வளவு கஷ்டம் அந்தப் பறவைக்கும் உண்டு. பக்ஷிகளைச் சிலர் கூண்டி லடைக்கவும் சிலர் கொன்று தின்னவும் வாங்குகிறார்கள். இதனால் நாம் அவைகளுக்குத் தீங்கு நேரிடாதபடி விற்பனை செய்வோரிடமிருந்து விலைக்கு

வாங்கிப் பறந்துபோக விட்டுவிடவேண்டும். அதன் சிறகுகள் கத்தரிக்கப்பட்டிருக்குமாகுல் அவற்றை இறகு சரியாக வளர்ந்து வருமட்டும் பாதுகாத்துப் பின்னால் விட்டுவிடவேண்டும். அநேகர் கிளிப்பிள்ளைகளை வாங்கிப் பூனைக்குப் பறிகொடுக்கிறார்கள். ஜெயிலுக்குச் சமானமான கூண்டிலடைத்து, நம்முடைய இஷ்டப்படி தீனி கொடுப்பதும் தனியே இருக்கச்செய்வதும் தவறு. கூண்டிலடைக்கப்பட்ட பக்ஷி தனக்கிஷ்டமான தீனி வேண்டுமாயின், அதற்குச் சொல்லவும் வாயில்லை. அது சொல்லினும் நயனபாஷையை நாம் கற்றோமில்லை. ஆதலால் பக்ஷிகளை யாராவது விற்கக் கண்டால் அவற்றைக் கூடுமானவரையும் விலைகொடுத்து வாங்கி அவைகளின் உயிரைக் காப்பாற்றும்படி நாம் நம்முடைய சிறுவர்களுக்குப் போதிக்கவேண்டும்.

ஒரு பரிதாபி.

போது நீதிகள்.

கீழ்க்கண்ட விஷயங்களை நம்முடைய கடமைகளாக எண்ணவேண்டும்:—

(1) மிருகங்களைக் கொரோமாய் அடிக்கக் கூடாது.

(2) பளுவிழுக்கும் மிருகங்களின்பேரில் மிதமற்ற பாரமேற்றக் கூடாது.

(3) அளவுக்குமிஞ்சி மிருகங்களை வண்டியிற் பூட்டி ஓட்டவும் கூடாது, சவாரி செய்யவும் கூடாது.

(4) முடமான மிருகங்களை வண்டியில் பூட்டிச் சவாரி செய்யக் கூடாது.

(5) குதிரைகளுக்கு இறுக்கமான கடிவாளங்கள் போடக் கூடாது.

(6) மிருகங்களுக்கு அளவுக்குமிஞ்சியாகிலும் குறைத்தாகிலும் தீனி போடக் கூடாது.

(7) மிருகங்களை ரெயில்மார்க்கமாகிலும், ஸ்டீமர் மூலமாகிலும் ஏற்றிக்கொண்டு போகும்போது அவைகளுக்குக் கஷ்டமில்லாமற்படி பார்க்கவேண்டும்.

(8) ஆடுகள், கன்றுகள், கோழிகள் முதலியவற்றின் கால்களை இறுக்கிக் கட்டக் கூடாது.

(9) பசுக்களினிடத்தில் பால் கறவாமல் அதன் மடியில் அதிகமாகப் பால் சேர்த்து வைக்கக் கூடாது.

(10) உயிருடனிருக்கும் கோழி முதலான பக்ஷிகளினிடத்திலிருந்து இறகுகள் பிடுங்கக் கூடாது.

(11) நாய்களுக்கும், சேவல்களுக்கும், மற்றும் மிருகஜாதிகளுக்கும் சண்டை யுண்டாக்கக் கூடாது.

(12) நாய்களின் காதுகளையும், வால்களையும் வெட்டக் கூடாது. பூச்சுகளினுடைய கைகால்களை ஒடித்துவிடக் கூடாது. மற்றும் எந்த விதங்களிலாகிலும் ஜீவன்களுக்குத் தீங்கு செய்யக் கூடாது.

(13) சரியான பாதைகள் ஏற்படுத்தவேண்டும்.

(14) உபத்திரவமில்லாத வழியாக மிருகங்களைக் கொல்லவேண்டும்.

(15) குதிரைகளுக்குச் சீர்திருத்தமுள்ள விதமாக லாடங்கள் அடிக்கவேண்டும்.

(16) வழிகளிலும், ஆடுமாடுகள் இருக்குமிடங்களிலும் தண்ணீர்த் தொட்டிகள் கட்டுவிக்கவேண்டும்.

(17) மிருகங்களின் க்ஷேம ஸ்திதியின் பொருட்டுச் சரியான சட்டங்கள் ஏற்படுத்தவேண்டும்.

(18) சிறு பிள்ளைகள் ஜீவஜந்துக்களின் பேரில் பக்ஷமாக விருக்கும்படிக் கற்பிக்கவேண்டும்.

(19) மிருகங்களின்பேரில் நாம் தயை வைக்கும்படியாக நம்மனதைத் தூண்டிவிடவேண்டும்.

(20) வண்டி ஓட்டுபவர்கள் தங்கள் குதிரை, மாடுகள்பேரில் கருணையாயிருக்கும்படிப் போதிக்கவேண்டும்.

(21) ஜனங்கள் பக்ஷிகளையும், அவைகளின் கூடுகளையும் காப்பாற்றவேண்டும்.

(22) பட்டணங்களிலும் சுற்றுப் பிரதேசங்களிலுமுள்ள ஜனங்கள் அங்கங்கு ஜீவஹிம்ச நிவாரண சங்கங்கள் ஏற்படுத்தவேண்டும்.

(23) தர்மவான்கள் ஜீ. ஹி. ஸி. சங்கங்களுக்கு வேண்டிய பணஉதவி செய்யவேண்டும்.

(24) பத்திராதிபர்கள் தங்கள் பத்திரிகைகளில் மிருகங்களின் க்ஷேமத்தை யுண்டாக்கத் தகுதியான முறைகளைத் தெரிவித்து வரவேண்டும்.

(25) நாம் நம்முடைய ஸ்திரீகளுக்கும் ஜீவகாருண்யத்தைக் குறித்துப் போதிக்கவேண்டும்.

சமாசாரக் குறிப்புகள்.

1. அஸ்வ சிகிச்சா சாரம். — குதிரைகளை வாங்கின பிறகு அவைகளைக் காப்பாற்றுவது மிகவும் அரிதும் அவசியமுமாகும். அதற்காக ஐந்து தத்துவ டாக்டர் ஒருவரால் தெலுங்குப் பாஷையில் கிரந்தமொன்றுதயார் செய்யப்பட் டிருக்கிறது. அக்கிரந்தத்தில் குதிரையின் வயது, சரீர தத்துவம், சீதோஷ்ணகாலங்களில் செய்யப்படவேண்டிய சிகிச்சை, அதற்குண்டாகும் பல ரோகங்கள், அந்தந்த ரோகங்களுக்குச் செய்யவேண்டிய சிகிச்சைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதன் விலை ஒரு ரூபாய். வேண்டியவர்கள் கிருஷ்ணா ஜில்லா ஏலூரு ஆயுர்வேத சங்கத்தின் மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

2. காட்டுப் பக்ஷிகளைக் காப்பாற்றுதல்.— பலவிதமான காட்டுப் பக்ஷிகளை அவற்றின் இறகுகளுக்காகக் கொல்லவும், அவற்றைப் பிடிக்கவும் கூடாதென்று ஜப்பான் தேச இராஜாங்கத்தார் சட்டமொன்று ஏற்படுத்தியிருப்பதாக அறிகிறோம். அச்சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள், பக்ஷிகளைக் காப்பாற்றும் ஒவ்வொருவருக்கும் மிகுந்த வியப்பையுண்டாக்கும். இம்மாதிரி ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பிரான்ஸு, ஜெர்மனி முதலான தேசங்களில், பயிர்களை நாசம்செய்யும்புழுக்களின் உபத்திரவத்தைத் தொலைப்பதற்காகக் காட்டுப் பக்ஷிகளைக் காப்பாற்றும் சபை யொன்று ஏற்பட்டிருப்பதனால், ஐரோப்பாவில் இறகுகள் வியாபாரம் செய்யும் வர்த்தகர்களுக்கு அவ்விடத்தில் இறகுகள் கிடையாமற் போகின்றன. அதனால் அவர்கள் கொரியா, ஜப்பான் தேசங்களுக்குப் போகத் தலைப்பட்டார்கள். அவ்விடத்திலும் மேற்குறித்த சட்டம் ஊர்ஜிதப் பட்டது.

---

3. மைசூரில் கால்நடைகளைக் கொலை செய்தல்.—தோல் வியாபாரம் செய்யும் சில லப்பை மகமதியர்கள், மைசூரிலிருக்கும் மடிகார் மகமதியர்கள் ஆகிய இவ்வகுப்பாருக்கு லஞ்சம் கொடுத்து, அநேகம் கால்நடைகளைக் கொல்லுவித்து அவைகளின் தோல்களையும், கொம்புகளையும், எலும்புகளையும் தாங்கள் வாங்கிக்கொண்டு வர்த்தகம் செய்து வருவதாக மைசூரிலிருக்கும் கெ. ஷாமய்யங்கார் என்பவர் மைசூர்க் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்தார். மேற்படி கவர்ன்மெண்டார் இச்சங்கதியைத் தமது கீழ் அதிகாரிகளுக்குத் தெரிவித்துத் தக்க முயற்சிகள் செய்யும்படி உத்தரவிட்டார்கள். அவ்வாறே இக்கொடிய பழக்கங்களை நிறுத்தும்படித் தக்க முயற்சிகள் செய்து வரப்படுகின்றன.

---

4. மைசூர் மகா ராஜாவின் குதிரை லாயங்கள்.—மைசூர் மகா ராஜா அவர்களின் பலவிதக் குதிரைகள் அந்தந்த ஜாதியின் பிரகாரம் பிரிக்கப்பட்டுத் தனித்தனி லாயங்களில் வைக்கப்பட் டிருக்கின்றன. ஒவ்வொரு குதிரையும் மிகச் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கிறது. அக்குதிரைகளில் 20 வயதுடைய ஒரு பரிசுத்தமான குதிரை யொன்று இருக்கிறது. அக்குதிரை ஜாதிப் பிராமணன்போல் நடத்தப்படுகிறது. அந்தக் குதிரைக்கெனத் தனியே வேலைக்காரர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குக் கொள்ளு, ஜலம் முதலானவை தனிப்பாத்திரங்களில் சமைக்கப்படுகின்றன. ஜலம் கொண்டுவந்து தொட்டியில் கொட்டவும் தனியே ஆள் ஒருவன் நியமிக்கப்பட்டிருக்கிறான். அந்தக் குதிரை துல்லித வெண்மையாக விருக்கிறது. அதன் தேகத்தில் முக்கியமாகப் பன்னிரண்டு திரு அடையாளங்களிருக்கின்றன. அதன் அழகான நீண்ட வால் தசரா பண்டிகையின்போது, நீலம், சிவப்பு, மஞ்சள் ஆகிய இம்மூன்று வர்ணங்களினால் பூசப்படுகிறது. இவ்வர்ணம் மறு தசரா பண்டிகைவரையும் வைக்கப்பட்டிருக்கிறது. அக்குதிரை தற்போது கிழமாய்விட்டதனால் அதற்குப் பதிலாக வேறொரு குதிரை சம்பாதிக்கும்பொருட்டு இந்தியா முழுவதும் தேடியும் கிடையாமற் போய்விட்டது.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1909.